TAMILTH Tirunelveli 1 Regional_02 21_13_59



## மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை

# நிலையான வளர்ச்சிக்கு துணைபுரியும்

### தூத்துக்குடி வர்த்தக சங்கங்கள் வரவேற்பு

**தூத்துக்குடி**

மத்திய அரசின் 2023– 2024–ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தூத்துக்குடி வர்த்தக சங்கங்கள் வரவேற்றுள்ளன. தூத்துக்குடி இந்திய வர்த்தக தொழில் சங்க செயலாளர் டி.ஆர்.கோடீசுவரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

மத்திய அரசின் பட்ஜெட்டை இந்திய வர்த்தக தொழிற்சங்கம் வரவேற்கிறது. இந்த பட்ஜெட் சமநிலையானது. ஒரு டிரில்லியன் டாலர் டிஜிட்டல் பொருளாதாரத்தை அடைவதில் மற்றொரு படியாக இருக்கும். விவசாயம், உள்கட்டமைப்பு, சிறு, குறு தொழில்கள், நடுத்தர வர்க்கத்தினருக்குத் தேவையான வருமான வரிச் சலுகைகளை வழங்குவதில் முக்கிய கவனம் செலுத்தி, நிலையான வளர்ச்சியை அதிகரிக்க தெளிவான உறுதிப்பாட்டை பட்ஜெட் உறுதி செய்துள்ளது.

மீனவர்கள், மீன் விற்பனையாளர்கள் மற்றும் குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களின் செயல்பாடுகளை மேலும் ஊக்கப்படுத்தவும், மதிப்புச் சங்கிலித் திறனை மேம்படுத்தவும், சந்தையை விரிவுபடுத்தவும், ரூ.6 ஆயிரம் கோடி முதலீட்டுடன், பிரதமர் மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் புதிய துணைத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டத்தில் வைப்புத்தொகை ரூ.15 லட்சத்தில் இருந்து ரூ.30 லட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது. ஆகிய திட்டங்கள் வரவேற்கத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய வர்த்தக தொழில் சங்கம்: தூத்துக்குடி அகில இந்திய வர்த்தக தொழில் சங்க தலைவர் டி.ஆர்.தமிழரசு வெளியிட்டுள்ள அறிக்கை: மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் சிறு, குறு தொழில் முனைவோருக்கு


டி.ஆர்.கோடீஸ்வரன்


டி.ஆர்.தமிழரசு

கடன் உத்திரவாதம் ரூ.9 ஆயிரம் கோடி ஒதுக்கி இருப்பதும், கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்திருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

மீனவர்கள் நலனுக்கான ரூ.6 ஆயிரம் கோடி துணைத்திட்டம், சிறு தானியங்களுக்கான சேமிப்பு கிடங்கு செயல்படுத்துவது, நகர்ப்புற உட்கட்டமைப்புக்கு ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கி இருப்பது, ரயில்வே திட்டத்துக்கு முதன் முறையாக ரூ.2.40 லட்சம் கோடி ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. ஏகலைவன் பள்ளிக்கூட திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள் நியமனம் செய்வது, 30 சர்வதேச திறன் இந்தியா மையங்கள் திட்டத்தில் மாணவர்கள் பயன்பெற இருப்பது, பெண்களுக்கான சிறப்பு சேமிப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது.

செல்போன், டிவி. போன்ற சில முக்கிய மின்சாதனங்களுக்கு வரிகுறைப்பு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. 5ஜி சேவைக்கான ஆய்வகங்களை தொடங்குவதன் மூலம் பொறியியல் மாணவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக மத்திய அரசின் பட்ஜெட் வரவேற்கத்தக்கதாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குமரி கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வு

# தூத்துக்குடி துறைமுகத்தில் 3-ம் எண் எச்சரிக்கை கூண்டு

### பரவலாக சாரல் மழை, விசைப்படகுகளுக்கு ஓய்வு

**தூத்துக்குடி**

குமரிக் கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று பரவலாக சாரல் மழை பெய்தது. தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் 3-ம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

வங்கக்கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று அதிகாலையில் இலங்கையில் கரையை கடந்தது. இந்த தாழ்வு மண்டலம் தென்மேற்கு திசையில் நகர்ந்து குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் இன்று (பிப.3) நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி உள்ளிட்ட தென்தமிழக மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும், தென் தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் சூறாவளிக்காற்று வீசும், எனவே அந்த பகுதிகளுக்கு மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. பகல் நேரத்திலும் குளிராக இருந்தது.


குமரிக் கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் கரையில் நிறுத்தப்பட்டிருந்தன. படம்: என்.ராஜேஷ்

மேலும் காலை முதல் பலத்த காற்று வீசியது. இதனால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமப் பட்டனர்.

மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் அவ்வப்போது லேசான சாரல் மழை பெய்தது. இதமான சூழல் நிலவியது. வானிலை ஆய்வு மைய எச்சரிக்கையை தொடர்ந்து, நேற்று 3-வது நாளாக தூத்துக்குடியில் விசைப் படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள 245 விசைப் படகுகளும் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் குமரிக்கடல் பகுதிக்குள் நுழைந்துள்ளது குறித்து கப்பல்கள் மற்றும் மீன்பிடி படகுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் நேற்று 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

# எச்ஐவி, காச நோயாளிகளுக்கு சத்துணவு வழங்கல்

**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்ட தேசிய காச நோயகற்றும் திட்டம் வல்லநாடு காச நோய் பிரிவு சார்பில் எச்ஐவி மற்றும் காச நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்ச்சி வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வட்டார மருத்துவ அலுவலர் மு.சுந்தரி தலைமை வகித்தார். சித்த மருத்துவ அலுவலர் செல்வகுமார் முன்னிலை வகித்தார். முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் அ.அப்துல் ரஹீம் ஹீரா வரவேற்றார். எச்ஐவி, காச நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சத்துணவை அத்துறையை சார்ந்த நம்பிக்கை மைய ஆற்றுப்படுத்துநர் அய்யம்மாளிடம் வட்டார மருத்துவ அலுவலர் சுந்தரி வழங்கினார்.

ஆய்வக நுட்புநர் ராஜேஸ்வரி, மருத்துவமனை பணியாளர் வேம்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சித்த மருத் துவ மருந்தாளுநர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

## குரூப் 2 இலவச மாதிரி தேர்வு

**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்ட மைய நூலகர் மா.ராம்சங்கர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்ட மைய நூலகமும், கோவில்பட்டி துளிர் ஐஏஎஸ் அகாடமியும் இணைந்து தூத்துக்குடி டூவிபுரம் 9–வது தெருவில் அமைந்துள்ள மாவட்ட மைய நூலகத்தில் வைத்து வரும் 15.02.2023 மற்றும் 20.02.2023 அன்று காலை 10 மணிக்கு டிஎன்பிஎஸ்சி குரூப்–2 பிரதான தேர்வுக்கான இலவச மாதிரி தேர்வை நடத்தவுள்ளன. இந்த மாதிரி தேர்வில் பங்குபெற விரும்புபவர்கள் 9444206805, 9444206905 ஆகிய செல்போன் எண்களில் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்டூடியோ பூட்டை உடைத்து கேமரா, பொருட்கள் திருட்டு

**தூத்துக்குடி**

தூத்துக்குடி அருகே உள்ள தெற்கு சங்கரப்பேரியை சேர்ந்தவர் மகேஷ் (43). இவர், தூத்துக்குடி எட்டயபுரம் சாலை மாப்பிள்ளையூரணி விலக்கு பகுதியில் ஸ்டூடியோ நடத்தி வருகிறார். இவர் நேற்று காலையில் வந்த போது, கடையின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த மகேஷ், கடைக்குள் சென்று பார்த்த போது கடையில் இருந்த ரூ.2.40 லட்சம் மதிப்புள்ள கேமரா, பிளாஷ், பேட்டரி சார்ஜர், லென்ஸ் உள்ளிட்ட பொருட்களை மர்ம நபர்கள் திருடிச் சென்றிருப்பது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் தூத்துக்குடி சிப்காட் காவல் உதவி ஆய்வாளர் ஹென்சன் பவுல்ராஜ் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினார். இதே போல் முத்தையாபுரத்தில் உள்ள ஒரு ஸ்டூடியோவிலும் மர்ம நபர்கள் கேமராவை திருடி சென்றுள்ளனர்.

## நகராட்சி அதிகாரியை பணி செய்யவிடாமல் தடுத்ததாக 6 பேர் மீது வழக்கு

**கோவில்பட்டி**

கோவில்பட்டியில் நகராட்சி அதிகாரியை பணி செய்யவிடாமல் தடுத்ததாக 6 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட பசும்பொன் உ.முத்துராமலிங்க தேவர் தினசரி சந்தைக்கு நகராட்சி வருவாய் ஆய்வாளர் தலைமையிலான அதிகாரிகள் சென்று வாடகை பாக்கி செலுத்தாத 3 கடைகளை மூடி சீல் வைத்தனர். அப்போது அங்கு திரண்ட வியாபாரிகள் மற்றும் பல்வேறு அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து, அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தகவல் அறிந்து அங்கு வந்த கிழக்கு காவல் நிலைய போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தி, வியாபாரிகளை கலைந்து போக செய்தனர். சீல் வைக்கப்பட்ட 3 கடைகளும் திறக்கப்பட்டன.

இந்நிலையில், கிழக்கு காவல் நிலையத்தில் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) எஸ்.பார்த்தசாரதி அளித்துள்ள புகாரின்பேரில், தினசரி சந்தை குத்தகைதாரர்களான சின்னமாடசாமி, குமார், செல்வம், எஸ்.எஸ்.சுரேஷ், தமிழரசன், பாலமுருகன் ஆகிய 6 பேர் மீது அரசு பணி செய்யவிடாமல் தடுத்தல், பணியாளர்களை அவதூறாக பேசி தாக்கியது உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

## காலாவதியான உரிமத்துடன் இயங்கிய பேக்கரி, மளிகை கடைக்கு 'சீல்'

**கோவில்பட்டி**

உணவு பாதுகாப்புத் துறையின் மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ச.மாரியப்பன் தலைமையில், புதூர் மற்றும் விளாத்திகுளம் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் அடங்கிய குழுவினர் நேற்று வேம்பாரில் ஆய்வு நடத்தினர். ஒரு பேக்கரி உணவு பாதுகாப்பு உரிமம் காலாவதியான பின்னரும் தொடர்ந்து இயங்கி வருவது கண்டறியப்பட்டது. அந்த பேக்கரியில் உரிய லேபிள் விவரங்களின்றி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பிரட், சேவு உள்ளிட்ட 30 கிலோ உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், பொதுமக்களின் பொது சுகாதார நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் அதீத சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்டதால் அந்த பேக்கரிக்கு சீல் வைக்கப்பட்டது. இதுபோல் காலாவதியான உணவு பாதுகாப்பு உரிமத்துடன் இயங்கிவந்த ஒரு மளிகைக் கடையும் மூடப்பட்டது.

## தூத்துக்குடி மாவட்டத்தில்

# காணாமல் போன 95 செல்போன்கள் மீட்பு

### இதுவரை 775 செல்போன்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு

rakeshh.sridhar@hindutamil.co.in

**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு காவல் நிலையங்களில் செல்போன் காணாமல் போனதாக பெறப்பட்ட மனுக்கள் தொடர்பாக சைபர் குற்றப்பிரிவு போலீஸார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி செல்போன்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு எஸ்பி எல்.பாலாஜி சரவணன் உத்தரவிட்டார்.

அதன்பேரில் சைபர் கிரைம் ஆய்வாளர் சிவசங்கரன் தலைமையிலான தனிப்படை போலீஸார், காணாமல் போன செல்போன்கள் எங்கெங்கு உள்ளன என்பதை அவற்றின் ஐஎம்இஐ எண்ணை வைத்து கண்டு பிடித்து, சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களுக்கு தெரிவித்து அவற்றை பறிமுதல் செய்தனர். அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட 680 செல்போன்கள் ஏற்கெனவே அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக தற்போது சைபர் கிரைம் குற்றப்பிரிவு தனிப்படையினர் தீவிர விசாரணை நடத்தி மேலும் ரூ.11.50 லட்சம் மதிப்புள்ள 95 செல்போன்களை கண்டு பிடித்துள்ளனர். இந்த செல்போன்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. செல்போன்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து எஸ்.பி., பேசியதாவது: செல்போன்களை பயன்படுத்தும்போது மிகவும் கவனமாக கையாளவேண்டும். பள்ளி குழந்தைகள் செல்போனில் ஆன்லைன் வகுப்பு பயிலும் போது அவற்றை கட்டுப்பாடுடன் கையாள்வதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். குழந்தைகள் பயன்படுத்தும் ஸ்மார்ட்போனுக்கு லாக் தேவையில்லை. பெற்றோருக்கு தெரியாமல் குழந்தைகளுக்கு ரகசியங்கள் இருக்க வேண்டிய


தூத்துக்குடியில் சைபர் கிரைம் போலீஸாரால் மீட்கப்பட்ட செல்போன்களை உரிமையாளர்களிடம் ஒப்படைத்து எஸ்பி எல்.பாலாஜி சரவணன் பேசினார். உடன் ஏடிஎஸ்பி கார்த்திகேயன்.

அவசியமில்லை. செல்போனில் ஆன்லைன் ரம்மி விளையாடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் ஆன்லைன் ரம்மி விளையாடாமல் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். சமூக வலைதளங்களை பயன்படுத்தும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும், முகம் தெரியாத நபர்களிடம் பழகக்கூடாது.

வங்கியில் இருந்து பேசுவதாக கூறி ஓடிபியை கேட்பவர்களிடம் ஓடிபி எண்ணை கொடுக்க வேண்டாம். உங்களுக்கு வரும் ஓடிபியை யாரிடமும் பகிராதீர்கள். அதன் மூலம் உங்கள் பணம் ஏமாற்றப்பட்டு மோசடி நடைபெறும். சமூக வலைதளங்களில் வரும் வேலை வாய்ப்பு சம்பந்தமான செய்திகளை நம்பி பணம் கொடுத்து ஏமாற வேண்டாம்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு இதுபோன்ற குற்ற நிகழ்வுகளில் இருந்து தற்காத்து தங்கள் பணத்தை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

மேலும் இதுவரை ரூ.79.50 லட்சம் மதிப்புள்ள 775 காணாமல் போன் செல்போன்களை தொழில் நுட்பரீதியாக கண்டு பிடித்த சைபர் குற்றப்பிரிவு போலீஸாரை பாராட்டினார். நிகழ்ச்சியில் ஏடிஎஸ்பி கார்த்திகேயன், சைபர் குற்றப் பிரிவு காவல் உதவி ஆய்வாளர்கள் சுதாகர், அச்சுதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


**UJJIVAN SMALL FINANCE BANK**

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
**கிளை அலுவலகம்:** வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம அருகில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில்-629001.

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 23.01.2023 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை in INR | டேவணித்தொகை (EMD) in INR |
|---|---|---|---|---|---|
| 1. | 1658210180000026 Mr. சரவணன் S/o. நாராயணன் & Mrs. லீனா W/o. சரவணன் | (i) 15.07.2021 14.07.2021 அன்றுள்ளபடி ரூ.31,98,164/- (ரூபாய் முப்பத்தோரு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று அறுபத்து நான்கு) (ii) 14.07.2022 | ரூ.41,73,862.30 (ரூபாய் நாற்பத்தோரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று அறுபத்து இரண்டு மற்றும் பைசா முப்பது மட்டும்) | ரூ.38,10,000/- (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்). | ரூ.3,81,000/- (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்தோராயிரம் மட்டும்) |
| | **சொத்து விவரம் :** கன்னியாகுமரி பதிவு மாவட்டம் மற்றும் மனவாளகுறிச்சி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட மறு சர்வே எண்.883/9, பட்டா எண்.12243, தற்போது மறு சர்வே எண். பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.883/9B, **கல்குளம் கிராமம் கடியாபட்டனம், மனவாளகுறிச்சி தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள பரப்பு 5.533 சென்ட் நிலம் மற்றும் கட்டிடம்** மற்றும் அனைத்து இதர அனுபந்தங்கள் மற்றும் அதனடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ராஜலஷ்மி-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: அம்புஜம்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: 16 அடி அகல கிழக்கு மேற்கு வழிப்பாதை, மேற்கு: கால்வாய். சொத்தானது வெள்ளிசந்தாய் கிராம பஞ்சாயத்தில் உள்ளது. | | | | |
| 2. | 1658210090000002 1. Mr. முத்துகுமார் L, 2. Mr.லஷ்மண பெருமாள் 3. Mrs. பாமா L | (i) 05.02.2022 & 04.02.2022 அன்றுள்ளபடி ரூ.31,60,694/- (ரூபாய் முப்பத்தோரு லட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு) (ii) 14.07.2022 | ரூ.37,93,386.22 (ரூபாய் முப்பத்து ஏழு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து முன்னூற்று எண்பத்து ஆறு மற்றும் பைசா இருபத்து இரண்டு) | ரூ.7,16,000/- (ரூபாய் ஏழு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்). | ரூ.71,600/- (ரூபாய் எழுபத்தோராயிரத்து அறுநூறு மட்டும்) |
| | **சொத்து விவரம் :** கொட்டாரம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.2396, மறு சர்வே எண்.339/6, பட்டா எண்.4456, **தாமரைகுளம் கிராமம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 6 சென்ட் நிலம் மற்றும் கட்டிடம்**, அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் அனைத்து இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: கிழக்கு: சுவாமி தாஸ்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: வழிப்பாதை, வடக்கு: வழிப்பாதை, தெற்கு: பால்வர்ணன்-க்கு சொந்தமான தெற்கு பகுதி பங்கு. | | | | |

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 17.03.2023 காலை 10.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை**

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **16.03.2023** காலை 11.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: **15.03.2023** காலை 11.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mob: 9813887931**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: நாகர்கோயில்
இடம்: 03.02.2023



**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

**பெயர் மாற்றம்**

ஸ்டான்லி கிறிஸ்பின் ஆகிய நான், எனது மனைவியின் பெயர் தா.ஸ்.பிரசன்ன குமாரி, பிறந்தநாள்: 25.10.1956, (சொந்த மாவட்டம்: கன்னியாகுமரி), இருப்பிடம் கதவு எண் :12-83, சூழச்சன்விளை, செந்தறை, கீழ்குளம் அஞ்சல், விளவங்கோடு வட்டம், கன்னியாகுமரி மாவட்டம், இதுமுதற்கொண்டு தாசையன் ஸ்டான்லி என்று அழைக்கப்படுவாள்.

தக்கலை 19.01.2023 ஸ்டான்லி கிறிஸ்பின்

**பெயர் மாற்றம்**

சாகுல் அன்வர், த/பெ. முகம்மது சகாபுதீன், கதவிலக்கம் 3/45, நாராயணசாமி கோவில் தெரு, சம்மன்குளம் கிராமம், தென்காசி மாவட்டம், என்ற முகவரியில் வசித்து வரும் நான் எனது பெயரை சாகுல் அன்வர் என்பதிலிருந்து சாகுல் அன்வர் ஹயாத் என மாற்றியுள்ளேன் சாகுல் அன்வர்

**கல்வி**

**பயிற்சி வகுப்புகள்**

**TALK INGLISH**
Spoken English
தமிழ் மூலமாக கற்க
Correspondence Course
Certificate வழங்கப்படும்.
SMS / WhatsApp-ல் Hi அனுப்பவும்/ அழைக்கவும்: 94450 97051
TalenTra Academy, Chennai-37



இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.



படிவம் எண் URC-2

**அத்தியாயம்-XXI, இன் பகுதி I, இன் கீழ் பதிவு செய்வது குறித்த அறிவிப்பை வழங்கும் விளம்பரம் [நிறுவனங்கள் சட்டம் 2013, இன் பிரிவு 374 (b) மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்ய அங்கீகாரம் விதிகள், 2014 இன் விதி 4(1) இன் படி]**

**1.** நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 366 இன் துணைப்பிரிவு (2) இன்படி, இவ்வறிவிப்பிலிருந்து பதினைந்து நாட்களுக்கு பிறகு ஆனால் முப்பது நாட்கள் காலாவதியாவதற்கு முன் தமிழ்நாடு சென்னை நிறுவன பதிவாளரிடம் M/S V.S. **அழகிரிசாமி செட்டியார் & ப்ரோஸ்** (கூட்டு நிறுவனம்) நிறுவனங்கள் சட்டம் 2013 இன் அத்தியாயம்-XXI, இன் பகுதி I, இன் கீழ் பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்ய விண்ணப்பம் செய்யப்பட உள்ளது.

**2.** நிறுவனத்தின் முதன்மைப் பணிகள் பின்வருமாறு:
**"தங்கம், பொன், வெள்ளி, வைரம், பிளாட்டினம், மற்றும் விலையுயர்ந்த கற்கள் உலோக நகைகள், போன்றவற்றை தயாரித்து மற்றும் கொள்முதல் செய்து விற்பனை செய்தல், திருமண மண்டபகங்கள் மற்றும் வணிக வளாகங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், விவசாயத்தில் ஈடுபடுவது மற்றும் கட்சிகள் பரஸ்பரமாக ஒப்பு கொள்ளக்கூடிய பிற சேவைகளில் ஈடுபடுவது."**

**3.** முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் வரைவு மெமோரண்டம் (MOA) மற்றும் ஆர்டிகல் (AOA) நகலை கதவு எண்: 254, மேற்கு பெரிய பருத்தி சாலை தூத்துக்குடி-628008. என்ற நிறுவனத்தின் முகவரியில் உள்ள அலுவலகத்தில் ஆய்வு செய்யலாம்.

**4.** இந்த விண்ணப்பத்தை எதிர்க்கும் எந்தவொரு நபரும் தங்கள் ஆட்சேபனையை இருபத்தொரு நாட்களுக்குள்ளாக எழுத்துப்பூர்வமாக நிறுவன பதிவாளருக்கு, மத்திய பதிவு மையம் (CRC), இந்திய நிறுவன விவகாரங்கள் நிறுவனம் (IICA), பிளாக் எண்: 6பி விங் 2ம் தளம், ஷாஸ்திரி பவன், 26, ஹடோவ்ஸ் சாலை, சென்னை -600034, தமிழ்நாடு என்ற முகவரியில் தெரிவிக்கலாம். மேலும் அதன் நகலை நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**விண்ணப்பதாரரின் பெயர்கள்**
1. க. பத்ரி நாராயணன்.
2. ரா. அழகிரிசாமி.
3. அ.ஜெயராமன்
4. அ.ராதாகிருஷ்ணன்

பிப்ரவரி 01, 2023 தேதியிடப்பட்டது.



எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by T. Murali at Survey No. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

MA-TI